# ஆனையிறவில் மும்முனைகளிலும் கடும் மோதல்


விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 21 இதழ்: 176
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 6-8-1991


[யாழ்ப்பாணம்]
ஆனையிறவு முகாமை அண்டிய பகுதிகளில் நேற்று மூன்று முனைகளிலிருந்து விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் உக்கிரமோதல் நடைபெற்றது.
படையினருக்கு உதவியாக புலிகளின் இலக்குகளை நோக்கி விமானங்கள் பலத்த குண்டு வீச்சு தாக்குதல் நடத்திய

[4ம் பக்கம் பார்க்க]

## புலிகள் - அரச படைகள் நேரடி கைகலப்பு

[யாழ்ப்பாணம்]
ஆனையிறவுப் பகுதியில் புலிகளுக்கும் இராணுவத்திற்குமிடையில் நேரடி கைகலப்பு மோதல்கள் இடம்பெற்றன.
நேற்றுமுன்தினம் ஆனையிறவு முகாமைச் சுற்றி இந்த

[4-ம் பக்கம் பார்க்க]

## 1,600 படையினர் பலி பாரிஸில் திலகர் அறிவிப்பு

(பரிஸ்)
ஆனையிறவுச் சண்டை ஆரம்பமான நாள் தொடங்கி இற்றைவரை 1,600 படையினர் கொல்லப்பட்டதாக, விடுதலைப்புலிகளின் பேச்சாளர் திரு. லோறன்ஸ் திலகர் நேற்று பரிஸில் தெரிவித்தார்.
ராணுவம் தமது இழப்பை

(4ம் பக்கம் பார்க்க)

# ஆனையிறவு முகாமுக்கான கடல்வழி விநியோக முறையை துண்டிக்க புலிகள் நடவடிக்கை

(லண்டன்)
ஆனையிறவிலுள்ள இராணுவத்திற்கு பொருள்கள் வரும் கடல் வழிகள் தொடர்ந்து துண்டிக்கப்படுமென்று விடுதலைப் புலிகள் பிரமுகர் ஒருவர் தெரிவித்ததாக பி. பி. ஸி. தெரிவத்தது.

ஆனையிறவுக்கு சுமார் எட்டு மைல் தொலைவிலுள்ள கரையோரப் பகுதியிலிருந்து ஆனையிறவு செல்லும் விநியோகவழியைத்துண்டிப்பதில் விடுதலைப் புலிகள் கவனம் செலுத்திவருவதாகவும் அவர் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-
வட-கிழக்கு கரையோரப்

(4ம் பக்கம் பார்க்க)

## 'பலவேகய'வினால் அரசுக்கு நிதித் துறையில் பாதிப்பு

[கொழும்பு]
'பலவேகய' தாகுதலினால் அரசுக்கு நிதித்துறையில் பெருமளவு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.
மேலும் இச்சண்டையின்

[2ம் பக்கம் பார்க்க]

## படையினர், ஆயுதங்களை குவிக்க ராணுவம் ஆலோசனை

(கொழும்பு)
ஆனையிறவு முகாமில் மேலும் படையினரையும், ஆயுதங்களையும குவிப்பதற்கு இராணுவத் தலைமைப்பீடம் ஆலோசனை நடத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது
படையினரின் ஆனையிறவுப் பிரவேசத்தின் பின்னரும் புலிகளின் தாக்குதல் தொடர்ந்து அதிகரித்து வருவதையடுத்து இராணுவ அதிகாரிகள் கலந்து கொண்ட உயர்மட்ட மாநாடு ஒன்று கொழும்பில் நடை

(4ம் பக்கம் பார்க்க)

## லஞ்சம் பெற்ற எட்டு இராணுவத்தினர் கைது

(கொழும்பு)
வடபகுதிக்கு உணவுப் பொருள் கொண்டு செல்லும் லொறிகளுக்கு அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு லஞ்சம் பெற்றதாகக் கூறப்படும் எட்டு இராணுவத்தினர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
தடைசெய்யப்பட்ட பொருள்களைக் கொண்டு செல்வதற்கு இந்த அதிகாரிகள் லஞ்சம் பெற்று அனுமதி வழங்கியது அண்மையில் கண்டுபிடிக்கப்

(2ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு சென்ற இராணுவ அதிகாரிகள்

கொழும்பு]
ஆனையிறவு இராணுவ முகாமிற்குள் படையினர் பிரவேசித்த பின்னர் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா, பதில் கடற்படைத் தளபதி றியல் அட்மிரல் கிளான்ஸி பெர்ணாண்டோ, மேஜர் ஜெனரல்

(4ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தை கைப்பற்ற விரைவில் இராணுவ முயற்சி - ஜெனரல் ரணதுங்கா

(கொழும்பு)
யாழ்ப்பாணத்தை கைப்பற்றும் நோக்குடன் இராணுவ நடவடிக்கையொன்றினை மேற்கொள்ளப்போவதாக பாதுகாப்பு அமைச்சு செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:
ஆனையிறவு இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தை நோக்கி

(4ம் பக்கம் பார்க்க]

## ஆனையிறவு படைகள் மீது புலிகள் தொடர்ந்து தாக்குதல்

### இராணுவ அதிகாரி தகவல்

(கொழும்பு)
ஆனையிறவுப் பகுதிக்குள் பிரவேசித்த படையினர் மீது புலிகள் நடத்திய கடும் தாக்குதலில் ஒரு இராணுவச் சிப்பாய் கொலலப்பட்டதுடன் முப்பது இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளதாக கொழும்பில் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
மேலும் நேற்றும் இம்முகாமினை நோக்கி புலிகள் தொடர்ந்து கடும் தாக்குதலை நடத்தி வருவதாகவும் அந்தஅதிகாரி தெரிவித்தார்.
முன்னேறிய படையினர் புலிகள் தாக்குதலைச் சமாளிக்க முடியாது திண்டாடி வருவதாகவும் அச்செய்திகள் தெரிவித்தன.

## 3 அதிகாரிகள் உட்பட 23 படையினர் பலி! இராணுவம் ஊர்ஜிதம்

(கொழும்பு)
மட்டு-பொலுநறுவ எல்லையில் புலிகள் நடத்திய அதிரடித்தாக்குதலில் மூன்று இராணுவ அதிகாரிகள் உட்பட 23 படையினர் கொல்லப்பட்டதை இராணுவ அதிகாரிகள் ஊர்ஜிதபபடுத்தியுள்ளனர்.
கடந்த சனிக்கிழமை இத்தாக்குதல் இடம்பெற்றது தெரிந்ததே.

## ★ நேற்றைய மோதல்: 2 கவசவாகனங்கள் தகர்ப்பு; பல சிப்பாய்கள் பலி

(யாழ்ப்பாணம்)
ஆனையிறவு, புல்லாவெளி, குறிஞ்சாதீவுப் பகுதிகளில் விடுதலைப்புலிகள் தொடர்ந்து நடத்திவரும் தாக்குதல்களினால் பல படையினர் கொல்லப்பட்டனர். இரு கவச வாகனங்கள் தகர்க்கப்பட்டன, பல காவலரண்கள் முற்றாக அழிக்கப்பட்டன.
நேற்று முன்தினம் தொடக்கம் நேற்றிரவு வரையில் இப்பகுதிகளில் இராணுவத்திற்கும் புலிகளுக்குமிடையில் பலத்த மோதல்கள் இடம் பெற்றன.
ஸ்ரீலங்கா படையினரின் பலத்த தாக்குதலுக்கு மத்தியிலும் விடுதலைப்புலிகள் நேருக்கு நேர் நின்று போராடி வருகிறார்கள்.
புல்லாவெளிச்

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**புலமைப் பரிசில் பரீட்சை**
**[ஆண்டு 5]**

புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை 9வது, 10வது பெறுதவர்கள் அதனைப் பெற்று விடையெழுதிக் கொடுத்தால் இலவசமாக உடன் திருத்திக் கொடுக்கப்படும். புலமைப்பரிசில் மாதிரிப் பயிற்சியும் கடந்தகால வினாத்தாள்களையும் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [சி-5076]

UNIVERSITY OF JAFFNA.

**Repeat examination Certificate Course in Data Processing and BASIC Language Programming**

The above examination will be conducted in November 1991. The eligible repeat candidates are requested to complete and submit the examination entry forms to the Examination branch, University of Jaffna, before 15th September 1991.

Those who are applying for the DPBL 22 paper (Project Work) are requested to meet the Head / Computer Unit on or before 31st August 1991 to discuss about the arrangements for project work. The exact dates of the examination will be notified Later.

Registrar,
University of Jaffna.

(A-1479)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

அளவெட்டி
## கும்பழாவளைப் பிள்ளையார் கோவில்

அளவெட்டி
கும்பழாவளைப் பிள்ளையார்கோவிலில்
08-08-91 வியாழக்கிழமை காலை 7-00 மணி

முதல் தமிழ் மக்களினதும், போராளிகளினதும் சுபீட்சமும் வெற்றியும் வேண்டி கணபதி ஹோமம் நடைபெறும். விநாயகப் பெருமானின் அருளால் வீரலட்சுமியின் கடாட்ஷம் வேண்டி நடைபெறவிருக்கும் இவ்வாராதனை, கூட்டுப் பிரார்த்தனையுடன் ஆரம்பமாகி யாகம், அபிஷேகம் முதலிய ஆராதனைகளுடன் பூர்த்தியாகும்.

**அளவையூர் மக்கள்**

[சி-5078]


# குறிஞ்சாத்தீவு யுத்தத்தில் ஜூலை 27ல் வீரமரணமடைந்த வீரவேங்கைகள்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவ தடைமுகாமின் குறிஞ்சாத்தீவு உப்பள விடுதிகள் பகுதிமீது 27-7-91 நடத்தப்பட்டதாக்குதலின்போது வீரமரணம் அடைந்த வேங்கைகள்விபரம்:

மதனா - சிவமலர் தளையசிங்கம், நுணுவில், சாவகச்சேரி.

கார்த்திகா - ரமணி ராசரட்ணம, இல. 16, சென்மேரிஸ் வீதி, நாவாந்துறை வடக்கு.

பிரதீபா - ஜெயந்தி பெரியதம்பி, பதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

மெடோனா - செல்வராணி மாயழகன்,பல்லவராயன்கபே, பூநகரி.

அன்பினி - விஜிதா சிவனடி மண்டான், கரணவாய்,

வதனி-கென்சி பத்திநாதன், மன்னார்.

சிகிலா -ரஞ்சினி நடராசா, தொல்புரம் மத்தி, சுழிபுரம்.

தங்கமணி - புஸ்பலதா நடராசா, மெத்தனை, கரவெட்டி, கிழக்கு.

யசீர்மா - சிவயோசினி சிவானந்தம் ஐயர், அல்வாய்மேற்கு திக்கம்,

பள்ளியா - வரலக்ஷ்மி தேவசிங்கம், சடையாண்டி ஒழுங்கை,வல்வெட்டித்துறை.

நெல்சா-சரோஜாதேவி சின்னக்குட்டி, கச்சாய் தெற்கு கொடிகாமம்.

யாழ்மொழி - விஜயலதா பாக்கியநாதர், போயிட்டி, இளவாலை,

சுனித்தா - உஷா கருணகரன், குச்சவெளி, திருமலை,

ஜஸ்மின் - செல்வமலர் கோபால், 4ம் வாய்க்கால், பன்குளம், திருமலை.

சுந்தரி - சுஜிதா தேவநாயகம், 2ம் வட்டாரம், நிலாவெளி, திருமலை.

இளவரசி - சந்திரபவானி சிவப்பிரகாசம், கொக்குத்தொடுவாய்.

மிட்டி செபஸ்ரியம்மா அலோசியாப் 6-ம் வட்டாரம் வங்காலை, மன்னார்.

காயத்திரி- உமாதேவி சந்திரசேகரம் ரெட்பானா விசுவமடு, முல்லைத்தீவு.

நிசா-சுமாதி சதாசிவம் 1ம் குறிச்சி தம்புவில் அம்பாறை.

காண்டீபன்-சுகந்தினிவேலாயுதம். கண்டாவளை, கிளிநொச்சி.

சுகந்தினி - யோகா கணபதிப்பிள்ளை, செக்கட்டிப்புலவு பம்பைமடு, வவுனியா.

வாணன் - நடேஸ் ஜெயக்குமார் சமாதியடி உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

வர்மன் - பாஸ்கரமூர்த்தி சுந்தரமூர்த்தி பேச்சியம்மன் கோவிலடி, வாழைச்சேனை.

சபா - மாரிமுத்து பத்மநாதன் சீ. ஆர். ஏ. பாம் பள்ளக்கால் குண்டசாலை,

மயில்வாகனம் - சின்னத்தம்பி கந்தரலிங்கம் பழைய தோட்டம், வி. வி. ரி.

ஜெயந்திரன் - கந்தப்பர் தவராசா, குருமன்வெளிகளுவாஞ்சிக்குடி, மட்டு.

பாரதி - நவரட்ணம் கோபாலபிள்ளை, செட்டிபாளையம், மட்டு நகர்.

நளினன்-- நாகராசா சிவக்குமார், ஆறுமுகத்தான் குடியிருப்பு. தனுமுனை, மட்டு.

வரதன்-மாசிலாமணி மகேந்திரன், பதுளை ரோட், பெரியபுல்லுமலை ஏற்றம், மட்டு.

ஆனந்தபாபு - தங்கராசா நடராசா, 120-3ம் குறிச்சி, 7ம்,வட்டாரம். துறைநிலாவணை, மட்டக்களப்பு,

நிதி - செல்வநைனர் சுந்தரராஜன், 6ம் வட்டாரம் கும்புறுப்பிட்டி, திருமலை.

புருஷ்லி - சிவரட்ணம் சின்னவன், சித்தாண்டி, தாழையடி, ரோட், மட்டக்களப்பு.

கரன்- வேலாயுதம்சிவனையா கங்குவேலி, தெகிவத்தை. திருமலை.

சிவம் (பவான்) - திருப்பரங்கதிர்நாதன் நெல்லைநாதன், இமையாணன், உடுப்பிட்டி.

உமாசங்கர் (ரவி) - சின்னமணி சென்சியஸ், 8/3, ரெக்கிளமேசன், குருநகர்.

திகில் - நங்கையா சேரன், D-7 கிளிநொச்சி.

நிமலேந்திரன் (பிரசன்ன) - தங்கவேல் செந்தில்குமரன். நடராசா வீதி, வி. வி. ரி.

கந்தன் - டானியல் ராஜ்குமார் கற்கோட்டை, அல்வாய் வடக்கு,

வேலுப்பிள்ளை - யூனியன் கந்தையா கந்தசாமி, சாவகச்சேரி.

சத்தியகுமார்- பொன்னையா சிவனேசராசா, திருப்பழுகாமம், மட்டக்களப்பு.

கிர்மானி - ஜோன் எட்வேட் கெனடி 64/1, மவுண்காமர் வீதி குருநகர்.

பவா - கதிரித்தம்பி கணேசலிங்கம், நல்லூர், பூநகரி.

அன்பு - பாலச்சந்திரன் ரமணன். அரசடி லேன். தும்பளை பருத்தித்துறை.

அலபேட் - நடராசா கலைச்செல்வம் கலைவாணி வீதி, தையிட்டி, கே. கே. எஸ், பலாலி,

பீலிக்ஸ் - அருளானந்தம் றெஜினல்டானந், கொஞ்சுவாசா தொட்டுவை, கோபாலபுரம்.

சத்தியராசீ - கந்தையா சத்தியசீலன் கோபாலபுரம் நிலாவெளி திருமலை.

சொனி சிவஞானந்தசுந்தரம் அசோகன், மட்டுவில்தெற்கு, சாவகச்சேரி.

விஜேத் -தர்மலிங்கம் தயாளன் ஆண்டித்தோட்டம் அல்வாய்.

ராஜன் - குமாரசாமி குணராசா கேணியடி, கொக்குவில் மேற்கு.

வதனன் - சுப்பிரமணியம் கேதீஷ்வரன் தெல்லிப்பழை. கிழக்கு, தெல்லிப்பழை.

சரா - சின்னத்துரை ஜீவராசா G. P. S. ரோட், கல்வியங்காடு.

குகதாஸ் - இராசரத்தினம் ராசேந்திரன் உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்

ரகீம் - ஐசாம் றெனுட் வீரபாகு அளவெட்டி தெற்கு, அளவெட்டி.

நிதி - இரத்தினம்இலங்கேஸ்வரன்(பாபு)கச்சாய்,கொடிகாமம்.

கீர்த்தி - வீரப்பாபிள்ளை கணேஸ்வரன் வரணி வடக்கு, வரணி.

திசைவீரன் - சற்குருநாதன் சற்குணபேசன் கச்சாய் வீதி, கொடிகாமம்.

சரத்பாபு

அல்பேட் - கந்தசாமி வன்னியசிங்கம் மட்டுவில் வடக்கு மட்டுநகர்.

சமீம் (ரகீம்) - நாகலிங்கம் ஜெகதாஸ் உரும்பிராய் தெற்கு. உரும்பிராய்.

மொராஜி - அரசரட்ணம் அரவிந்தன் சேனையூர் கட்டை பறிச்சான், மூதூர்.

கஜன் - கோபாலபிள்ளை புஷ்பராசா ஈச்சலம்பத்தை 52ம் கட்டை மூதூர்.

நிருபன் - வேலாயுதம்பாலச்சந்திரன் ஆலங்கேணி 1ஆம் வட். கிண்ணியா.

கேசியன் பரஞ்சோதிநாதன் நியூட்டன் சென் அன்ரனி லேன் பிரான்சிஸ், பண்டத்தரிப்பு.

பிருந்தன் - சின்னராசா ஜெயராட் திலகர் பள்ளங் கோட்டை நாணட்டான் மன்னார்.

ஆனந்தன்-கந்தசாமி துரைராஜவேல் வேம்படி, வல்வெட்டித்துறை.

கில்பேட் - ஞானராசா ஞானதீபன் கில்லியடி, இலுப்பக்கடவை மன்னார்.

## இராசி பலன்

**06-08-1991**
**(தமிழ்த் திகதி ஆடி 20)**
**செவ்வாய்க்கிழமை**

தமிழுக்கு ஆடி, 21; ஏகாதசி மாலை 6.17 வரை;மிருகசீரிடம் பி. இ. 2.59 வரை; சித்தயோகம், இராகுகாலம் மாலை 3.04 முதல், 4.34 வரை சுபநேரம் காலை 10.34 முதல் 12.04 ஏகாதசிவிரதம்.

மேடம்:- எதிர்பாராத அதிஸ்டம் தொழில் வெற்றி.

இடபம்:- மனக்குமுறல், கடன்சுமை குடும்பகவலை,

மிதுனம்:- இடமாற்றம் சுபகாரிய செலவு தொழில்லாபம்

கடகம்:- காரியதாமதம் சகோதரவிரோதம் அலைச்சல்.

சிங்கம்:- பயணங்கள் கைகூடல் அறிஞர் நட்பு, பெருமை.

கன்னி.- தொழில் மாற்றம் அன்னியர் உதவி மாமனார் தொல்லை.

துலாம்:- போட்டி மனப்பான்மை. வைத்திய செலவு மயக்கம்

விருச்சிகம்;- குறைகேட்டல் மனக்கலக்கம் மனைவியர் தொல்லை

தனுசு:- வாக்குவசீகரம் தாயன்பு தொழில் சிறப்பு

மகரம்:- பயனுள்ள செயல் காரியசித்தி பணவரவு.

கும்பம்:- தானதர்மம் அன்னியவாசம் உடல்சோர்வு

மீனம்:- குடும்பக்கலகம் மனச்சுமை தொழில் நஷ்டம்.

• ஜோஸ்யர்

## யாழ். ஆயர் பார்வையிட்டார்

[யாழ்ப்பாணம்]

விபத்தில் சிக்கி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவரும் பாலம் பொதுப்பணி மன்றத்தின் தலைவர் வண. ஆபரணம் சிங்கராயர் அடிகளாரை யாழ் ஆயர் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை நேரில் சென்று பார்வையிட்டதுடன்விரைவில் சுகம்பெற வேண்டுமென்றும் ஆசி கூறினர். [வி]

## ரயில் விபத்து 6 பேர் பலி

[புதுடில்லி]

உத்தரபிரதேசத்தில் கான்பூருக்கருகில் நேற்றுக்காலை நடந்த ரயில் விபத்தில் 6பேர் பலியாகினர். 19 பேர் படுகாயங்களுக்குள்ளாகினர்.

படையினரை ஏற்றிவந்த விசேட ரயில் ஒன்றுடன் பயணிகள் ரயில் மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டது. [பூ]

## பலவேகய

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

போது ஒருமளவு உயிர்ச்சேதமும், பொருள் சேதமும் ஏற்பட்டுள்ளதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து இவ்வாறான நடவடிக்கைகளைமேற்கொள்ள முடியாது இலங்கை அரசு பொருளாதாரரீதியாக பெரும் வீழ்ச்சியை எதிர்நோக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.


## லஞ்சம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது.

ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் இது தொடர்பான விசாரணைகள் அண்மையில் மேற்கொள்ளப்பட்டபோதே இவர்கள் கைதுசெய்யப்பட்டார்கள்.


# முதலாமாண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 19 - 07 - 1931

மறைவு: 19 - 07 - 1990

## அமரர் சுப்பிரமணியம் முத்துக்கிருஷ்ணபிள்ளை

ஆண்டுகள் ஒன்று உருண்டதய்யா
கனவுகள் தான் கலைந்ததய்யா
ஐயோ! நெஞ்சம்தான் துடிக்குதைய்யா!!
கயவனின் கடும்பிடிதான் வந்தயைதயா!!
கண்ணிமைக்கும் நேரத்தில் பேசாலை மண்ணில்
உயிர்தான் எங்கேயோ போனதய்யா!!
உற்றரும் உறவினரும் பதைபதைக்க
கண்கள் குளமாக, எங்கள் குடும்பம்
நிர்க்கதையாய் போனதய்யா!!
உங்களைத்தான் காணோம், உடலைத்தான்
அறியோம்!! என்னய்யா செய்தோம்!!
காலம்தான் பதில் சொல்லுமைய்யா!!
ஆத்மா சாந்திபெற அனைவரும் பிரார்த்திப்போம்,

மனைவி, மக்கள், மருமகன், பேரப்பிள்ளைகள்.

426/1, கில்னர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(சி 5077)

# ஜூலை 16 முதல் 30 வரை

## யுத்தத்தில் வீரமரணமடைந்த வேங்கைகள்

[நேற்றைய தொடர்ச்சி]

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவத் தளம் மீதான முற்றுகைப் போரிலும் கட்டைக்காடு, வெற்றிலைக்கேணியில் தரையிறக்கப்பட்ட படையினருடனும் நடந்த சண்டையில் 16-7-91லிருந்து30-7-91வரை வீர மரணமடைந்த வீர வேங்கைகளின் விபரம் வருமாறு :

சுபத்திரா- புவனேஸ்வரி சுந்தர், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி

சூரியகலா- குமுதினி நடராசா, செவ்வாயில் ரோட், கரவெட்டி மத்தி. கரவெட்டி.

ரூபிகா- வினோதா வேலாயுதப்பிள்ளை குழவிசுட்டான். நெடுங்கேணி

கஜந்தா- இந்திராணி மணியம், விலாசன்தோப்பு, இரணைமடு, கிளிநொச்சி.

ஜஸ்மின்- சத்தியமலர் சின்னத்தம்பி, அல்லாரை வடக்கு, கொடிகாமம்

அனுசா- ஜெசித்தா குமாரசாமி, ஏழாலை தெற்கு, ஏழாலை.

நிருபா- சதாசிவம் சரோஜினி, பெரியகல்லாறு, மட்டுநகர்.

விக்கி (சின்னையா ராமஜெயம், ஆண்டாள்குளம், மட்டக்களப்பு)

அஜந்தன் (வேலு ஆனந்தன், நித்தியடி, பாண்டியன்குளம், துணுக்காய்)

நரேஸ் (ஆரோக்கியநாதன் எட்வேட்ஞானசூரியர், சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பு)

சந்திரன் [முருகேசு ராஜேஸ் கண்ணன், கல்லடி, 85, அரசாங்க லிகிதர் ஒழுங்கை, மட்டு.]

தாஸ் செல்லப்பா குகேந்திரன், (141, உருத்திரபுரம், கிளிநொச்சி)

முரளி எட்லின் சிறீ [மருதங்குளம், மாங்கேணி, மட்டு.]

சுசில் ராமையா பொன்னம்பலம் [ராஜேந்திரன்], முழங்காவில், பள்ளிக்குடா, முழங்காவில்]

சிகானு [கதிரவேல் கருணேஸ்வரன், சிவன் ஸ்ரோர், முழங்காவில், பூநகரி]

மணாளன் [பியதாஸ் விஜயபால், பாரதிபுரம், திருமலை]

ஆதவன் (சிவலிங்கம் சிவானந்தம், பூநகர், திருமலை [மூதூர்]

ஜெயம் [யேசுதாஸ் கொணறியூட், சிறிநீலாசோலை, உயிலங்குளம்]

துரை[சிங்கராஜா மனோகர், கன்னிமேடு, தம்பலகசிமம்]

தமிழ்ச்செல்வன் [மாசிலாமணி நிறஞ்சன், திருமலை]

காமன்[கனகலிங்கம் சுதேஸ்வரன், பாரதிபுரம், திருமலை]

சசி [மாணிக்கராசா சிவகுமார் [6ம் கட்டை. விளாங்குளம், கண்டிவீதி, திருமலை]

சதீஸ் [க. புஸ்பராஜன், ஆலங்கேணி, கிண்ணியா]

லிங்கேஸ் [வன்னியசிங்கி ஐலன் ஜெயராஜ், 847, செல்வநாயகபுரம், உப்புவெளி]

காந்தரூபன் பிரான்ஸ் நெல்சன், 310, N. C. ரோட், திருமலை]

சுலோஜன் (சிற்சபை நிறஞ்சன், நாயன்மார் திடல், தம்பலகாமம்).

கோபி (சந்தையா பேரின்பமூர்த்தி, 6ம் வட்டாரம், வேலணை மேற்கு. வேலணை)

வண்டு (சுப்பிரமணியம் யோகேஸ்வரன், பருத்தித்துறை, தாளையடி)

யோகன் சின்னத்துரை கண்ணன், பட்சந்தை, சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்)

அல்பிரட் [சின்னத்துரை யோசப்கெனடி, கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறை]

நியாஸ் (செல்வரட்ணம் - சங்கர் - கைதடி நுணுவில், சாவகச்சேரி)

றெனோ (ஜெயசிங்கம் மதியழகன் - கைதடி நுணுவில், சாவகச்சேரி.

செனித் (குமாரசாமி திருவேகரன் - ஏழாலை மத்தி, ஏழாலை.

கர்ணன் (நவரட்ணம் செல்லர் குலேந்திரன் - 1ம் கட்டை, பருத்தித்துறை.

தயாளன் [சிவகுருமோகன சுந்தரம் - அலிகள்போட்ட குளம். ஓமந்தை

அலிஸ்ரன் (தியாகராசா கிருஸ்ணபாலன் - 4/894ம் கிராமம் சென்றல் காம்ப், அம்பாறை,

செந்தூரன் (கந்தையா நாகேந்திரன் - 31A, 11ம் காணி சென்றல் முகாம் அம்பாறை.

விநாயகன் [சித்திரவேல் மோகன் - உபதபாற்தோர் கதிரேலில் போரதீவு, மட்டு.

குருபரன் (ஆறுமுகம் பாலையா - எட்டியாந்தோட்டை, காரைநகர்)

அகிலன் [வேலன் மோகன சிறீ - கைதடி மேற்கு, உதயநகர், கைதடி)

ஜெயராமன் (சந்திரசேகரம் உதயகுமார் - கைதடி கிழக்கு, கைதடி)

செபமாலை (அலெக்சாந்றூபன் - 3ம் வட்டாரம், பேசாலை, மன்னார்)

சோழன் (மாணிக்கராசா சிறீசங்கர் - ஈச்சன்தீவு, ஆலங்கேணி, கிண்ணியா)

நரேஷ் [சபாரட்ணம் சிவபாதம் - கரவெட்டி]

சுதன் (இராசரட்ணம் ஜீவகுமார் - இரணை இலுப்பங்குளம் வீதி, பூவரசங்குளம்)

உபாலி (இராசதுரை பிரபாகரன் - 2ம் கண்டல், முத்தையன் கட்டு]

கணேஷ் (வைத்திலிங்கம் துரைவடிவேல் - வல்வை வீதி. கெருடாவில், தொண்டைமானாறு]

கணன் (நாகமுத்து கலியுகவரதன் - உடுத்துறை, தாளையடி]

அலெக்ஸ் [பூபாலசிங்கம் பவளகாந்தன் - கச்சாய்வெளி பளை)

அன்பு (யாக்கோப்அல்வின் கோட் - உயரப்புலம், ஆனைக்கோட்டை)

காஸ்ரோ (நடேசபிள்ளை சுதாகரன் - 162ம் கட்டை கண்டி வீதி, பரந்தன்)

அசோக் [கதிர்காமநாதன் இரகுநாதன், சங்கத்தார் வயல், யக்கச்சி]

## போர்க்கால சேவையில் ஈடுபட்ட ஸ்தாபனங்கள்

(யாழ்ப்பாணம்)

போர்க்காலச் சேவையில் பணிக்குச் சென்று வட்டவை ரீதியாக நூற்றுக்கு மேற்பட்ட ஸ்தாபனங்கள் சேவையாற்றியுள்ளன.

போர்க்கால சேவையில் ஈடுபட்டுள்ள ஸ்தாபனங்கள் விபரங்களை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட செயலகம் வெளியிட்டுள்ளது. அந்த ஸ்தாபனகளின்விபரம் வருமாறு.

### யாழ். வட்டவைப் பகுதி

யாழ். வட்டவைப் பகுதி. யாழ். பொம்மை வெளி சிற்றூரவை, வட பிரதேச வர்த்தக ஊழியர் சங்கம், யாழ். மத்தி சிற்றூரவை, சாயி மருத்துவப்பயிற்சி தாதி, கொட்டடி சிற்றூரவை, குருநகர் மேற்கு சிற்றூரவை, குருநகர் கிழக்கு சிற்றூரவை, பாசையூர் சிற்றூரவை, நாவாந்துறை சிற்றூரவை, யாழ். மத்தி, நகை வர்த்தக சங்கம், யாழ். பாரத் சன ச. ச. நி. குருநகர், ஆய்வு நிறுவனம், கொழும்புத்துறை சிற்றூரவை, சுண்டுக்குளி சிற்றூரவை, அறிவொளி ச. ச. நி. ஆனைக்கோட்டை, ஈச்சமோட்டை ச. ச. நிலையம், எழிலூர் விளையாட்டு கழகம், யாழ். வைத்தீஸ்வராலயம்.

### நல்லூர் வட்டவைப் பகுதி

நல்லூர் வட்டவை, காளி கோவிலடி ச. ச. நி. திருநெல்வேலி, அரியாலை மத்தி சிற்றூரவை, அரியாலை பிரதேச காரியாலயம்.

### தெல்லிப்பளை வட்டவைப் பகுதி

தெல்லிப்பழை வட்டவை, அளவெட்டி சிற்றூரவை,

### சங்கானை வட்டவைப் பகுதி

இளைஞர் மு. கழகம் சித்தன்கேணி, மூளாய் சிற்றூரவை, சங்கானை மேற்கு சிற்றூரவை, அராலி மேற்கு சிற்றூரவை, சங்கானை கிழக்கு சிற்றூரவை, சங்கரத்தை ச. ச. நிலையம், வட்டு. தெற்கு சிற்றூரவை, வட்டு. இளைஞர்அபிவிருத்திக் கழகம், சங்கானை தெற்கு சிற்றூரவை, சுழிபுரம்கிழக்கு சிற்றூரவை, தொல்புரம் சிற்றூரவை, அராலி கிழக்கு சிற்றூரவை, அண்ணா விளையாட்டு கழகம் அராலி. இந்து வாலியர் சங்கம், மூளாய் ஐ. இளைஞர் சங்கம், அராலி தெற்கு சிற்றூரவை,

### உடுவில் வட்டவைப் பகுதி

உடுவில் வட்டவை, உடுவில் தெற்கு சிற்றூரவை சிவசக்தி ச. ச. நிலையம், ஞானவைரவர் ச. ச. நிலையம், ஜனசக்தி ச. ச. நிலையம், சுன்ணாகம் வட ச. ச. நிலையம், சுன்ணாகம் மத்தி சிற்றூரவை, நேரடித் தொடர்பு துண்டுடை.

### சாவகச்சேரி வட்டவைப் பகுதி

சாவகச்சேரி வட்டவை, கைதடி-நுணுவில்சிற்றூரவை, மட்டுவில்-நுணுவில் சிற்றூரவை, மட்டுவில் கிழக்கு சிற்றூரவை, கோவிலாக்கண்டி சிற்றூரவை. நாவற்குழி தச்சன்தோப்பு, தனங்கிளப்பு மறவன்புலோ, மீசாலை மேற்கு சிற்றூரவை, சாவகச்சேரி வடக்கு, மீசாலை கிழக்கு, மிருசுவில் படித்த மகளிர்குடியேற்றத்திட்டம், கச்சாய் கொடிகாமம் சிற்றூரவை.

### சண்டிலிப்பாய் வட்டவைப் பகுதி

சில்லாலை வடக்கு சிற்றூரவை, நவாலி கிழக்கு சிற்றூரவை, நவாலி வடக்கு சிற்றூரவை, நவாலி தெற்கு சிற்றூரவை, சுதுமலை சிற்றூரவை, மாசியப்பிட்டி சூரியோதய ச. ச. நிலையம்.

### பச்சிலைப்பகுதி வட்டவைப் பகுதி

பளை ப. நோ. கூ. ச. ஊழியர், தெ. ப. பொ. கூ. ச. ஊழியர், வட்டவையூடாக.

### கோப்பாய் வட்டவைப் பகுதி

கோப்பாய் வட்டவை, இருபாலை தெற்கு சிற்றூரவை, உரும்பிராய் வடக்கு சிற்றூரவை, கோப்பாய் தெற்கு சிற்றூரவை, சனசக்தி வீதி சிறுப்பிட்டி, அண்ணா ச. ச. நிலையம், உதயதாரகை ச. ச. நிலையம், தமிழாலயம் புத்தூர், கலைமதி ச. ச நிலையம், ஆவரங்கால் சிற்றூரவை, நேரடித் தொடர்பு, உரும்பிராய் மேற்கு சிற்றூரவை, நீர்வேலி வடக்கு சிற்றூரவை, புத்தூர் கிழக்கு சிற்றூரவை, கோப்பாய் மத்தி சிற்றூரவை, புத்தூர் மேற்கு சிற்றூரவை, ஆவரங்கால் சிற்றூரவை, புத்தூர் மத்தி சிற்றூரவை, சிறுப்பிட்டி மேற்கு சிற்றூரவை, புத்தூர் மருதடி, பாரதி கலாமன்ற ச ச. நிலையம், கல்வியங்காடு இருபாலை மே. சிற்றூரவை, இளங்கதிர் ச. ச நிலையம், கலைவாணி ச. ச. நிலையம், வன்னியசிங்கம் ச. ச. நிலையம், ஞானஒளி ச. ச. நிலையம், விக்னேஸ்வரா ச. ச. நி. இருபாலை, உரும்பிராய் கிழக்கு புனித மிக்கேல், உரும்பிராய் கிழக்கு சிற்றூரவை.

### தீவகம்

ஊர்காவற்றுறை வட்டவை அகதிமுகாம்ஊடாக. வேலணை வட்டவை அகதிமுகாம் ஊடாக.

### வடமராட்சிப்பகுதி

வல்லை ஆதிகோயில் கட. தொ, சங்கம். தொண்டமானாறு பெரி கடற்கரை, கெருடாவில் காட்டுப்புலம், வல்வெட்டித்துறை மீனவர் சங்கம் கெருடாவில் மயிலதனை, வல்வெட்டித்துறை குச்சம் கரை, இன்பருட்டி கிராமிய க. அபி. கழகம், இன்பருட்டி குமரலிங்கம் குழு, தும்பளை கிழக்கு, சுப்பர்மடம் பருத்தித்துறை, சக்கோட்டை பருத்தித்துறை, சிங். நகர். உதயசூரியன் மன்ற ச. ச. நிலையம்.

## இயக்கத்திற்கு பிள்ளைகளை ஒப்படைத்த பெற்றோர்

(யாழ்ப்பாணம்]

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இரு பெற்றோர்கள் விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்ற தமது பிள்ளைகளை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தைச்சேர்ந்த இராமச்சந்திரன் தியாகராசா (வயது 18, 154ம் கட்டை, கிளிநொச்சி). யோகராசா பிரபா (வயது 16) இல 9, திருநகர், கிளிநொச்சி, ஆகிய இரு பிள்ளைகளினதும் பெற்றோர்கள் இவ்வாறு தமது பிள்ளைகளைத் தமிழீழ மண் மீட்புக்காக கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

## காயமடைந்த படையினர் பலாலிக்குச் செல்கின்றனர்

(கொழும்பு)

ஆனையிறவு முகாம் பகுதியில் இடம்பெற்ற மோதலில் காயமடைந்த படையினர் சிகிசைக்காக பலாலிக்கு கொண்டு செல்லப்படுகின்றனர்.

நேற்று முன்தினம் பலாலி முகாமில் பல தடவைகள் விமானங்களும் ஹெலிகொப்டர்களும் வந்து போனதும் இதற்காகவேயெனவும் தெரிய வருகிறது.

இதேவேளை ஆனையிறவு முகாமினுள் படுகாயமடைந்த நிலையிலிருந்த 56 படையினரும் தற்போது அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (சி)

## வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் இடமாற்றம்

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் பருத்தித்துறை பிரதேச சபை குடத்தனை உப அலுவலகத்திலிருந்து அம்பன் கமநலச் சேவை நிலயக் கட்டிடத்துக்கு மாற்றம்செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபை குடத்தனை உப அலுவலகத்திலேயே பருத்தித்துறை பிரதேசசபை செம்பியன்பற்று உப அலுவலகமும் மாற்றப்பட்டு செயற்பட்டுவருவதனாலும், இடப்பற்றாக்குறையினாலுமே உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் கமநலச்சேவை நிலையத்துக்கு மாற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பன் கமநலச்சேவை நிலையத்திலிருந்தே வடமராட்சி உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். கேதீஸ்வரனும், உத்தியோகத்தர்களும், கிராம சேவை அலுவலர்களும் கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி பகுதிகளின் இராணுவத் தாக்குதல்களால் இடம்பெயர்ந்து தஞ்சமடைந்தஅகதிகளுக்கான நிவாரண உதவிகளை வழங்கும் வேலைகளைத் துரிதமாக மேற்கொண்டுவருகின்றனர். (52)

## முல்லைத்தீவு மாவட்ட தபால் சேவை பாதிப்பு

(மாங்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத் தபாற் சேவை, ஊரடங்குச் சட்டத்தால் கடந்த மூன்று வாரங்களாகத் தொடர்ந்து செயலிழந்துள்ளது.

இப்பகுதித் தபாற்பொதிகள் வவுனியாத் தபாலகத்தில் தேங்கிக்கிடப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (150)

## வடமராட்சி பாடசாலைகளில் இடம்பெயர்ந்த அகதிகள் தஞ்சம்

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள பெரும்பாலான பாடசாலைகளும் அகதிகள் முகாம்களாகவே இயங்கி வருகின்றன. கட்டைக்காடு, வெற்றிலைக்கேணிப் பகுதிகளில் நடைபெற்றுவரும் ஸ்ரீலங்கா படையினரின் தாக்குதல்களுக்கு அஞ்சி இடம்பெயர்ந்த மக்கள் இப்பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ள மக்களுக்கு வேண்டிய நிவாரண உதவிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். கேதிஸ்வரனும் கிராம சேவை அலுவலர்களும் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நடவடிக்கைகளை அம்பனிலுள்ள பிரதேச சபைகாரியாலயத்திலிருந்து மேற்கொண்டுவருகின்றனர். அகதிகளுக்கு உடனடிநிவாரண உதவிகளை யாழ். செஞ்சிலுவைச் சங்ககிளை மேற்கொண்டது. (52)

## விசேட வழிபாடு

(யாழ்ப்பாணம்)

வியாழமாற்றத் தினமான நாளை 7ம் திகதி பொன்னாலை அருள்மிகு வரதராசப் பெருமாள் தேவஸ்தானத்தில் விசேட வழிபாடுகள் நடைபெறவுள்ளது. [வி]

## அ. தி. மு. க. - கம்யூனிஸ்ட் கட்சி

# தொண்டர்கள் மோதல்

# ஒருவர் பலி; 30 வீடு தீக்கிரை

(சென்னை)

தமிழகத்தில் தஞ்சை மாவட்ட பெருமாள்நகர் கிராமத்தில் அ. தி. மு. க - மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தொண்டர்களிடையே இடம்பெற்ற கடும்மோதலில் ஒருவர் பலியானார். 30 வீடுகள் முற்றாகத் தீக்கிரையாக்கப்பட்டன.

கடந்த சனிக்கிழமை இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. இம்மோதலில் கத்தி, பொல்லு மற்றும் வெட்டு ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது. சுமார் 30பேர் படுகாயமடைந்துள்ளனர்.

தற்போது அப்பகுதியில் பொலிசார் நிறுத்தப்பட்டு நிலைமை கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாம். (சி)

## ஒன்பது மாவீரர்களுக்கு கோண்டாவிலில் அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

ஆனையிறவில் நேற்று முன்தினம் வீரமரணமடைந்த கவிதா (கெலன் தேவநாயகம், இளவாலை), நிரேரா (தீபச்செல்வி சிவபாதம், திருமலை), சகுந்தலா (மேரி இமெல்டா மரியதாஸ், பண்டத்தரிப்பு). உதயன் (முருகேசு குமாரசாமி, மண்டூர்), தர்மிளா (கௌரி கனகு உருமபராய்), கேதீஸ் (சுப்பிரமணியம் விஜயதாசர், சுழிபுரம்), நிசாந்தன் இளைய தம்பி பிரேம்சிறி, நல்லூர்), மதிவாணன் (தர்மசிங்கம் தனேஸ்வரன். சங்கானை) சுதா (கந்தையா குணநாதன், மட்டு நகர்) ஆகிய மாவீரர்களின் புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் நேற்று வைக்கப்பட்டது.

அங்கு நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் தேவர் அண்ணா, கவிஞர் வாஞ்சிநாதன், ரூபலதா ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்தினர்கள்.

பின்னர் புகழுடல்கள் கோப்பாய் மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமாக்கப்பட்டது. (வி-56)

## வைத்திய அலுவலர்கள் பதவிகள் வெற்றிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நிர்வாகத்தின் கீழ் உள்ள வைத்தியசாலைகளில் வைத்திய அலுவலர்கள் பதவி வெற்றிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. பதவி ஆளணியின் பிரகாரம் 46 வைத்தியர்கள் மேற்படி நிருவாக எல்லையிலுள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்ற வேண்டும் தற்போது 10 வைத்திய அலுவலர்களே கடமையாற்றுவதாக தெரிவிக்கப்படுகிறது. (153)

## கலைக்கூறு பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சாரணர் மாவட்டத்தினால் கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்ட சாரணர் தலைவர்களுக்கான கலைக்கூறு I, II பயிற்சி நெறிகள் தொலைக் கல்விப் பயிற்சி நெறி காரணமாக இடைநிறுத்தப்பட்டன.

கலைக் கூறு I, IIஇன் மீதிப் பயிற்சிகள், நாளை 7ம் திகதி புதன்கிழமை காலை 10-00 மணி முதல் மறுநாள் காலை காலை 10-00 மணி வரை சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் இடம்பெறும்.

## அகதிகளை திருப்பி அனுப்ப இந்தியாவில் தீவிர முயற்சி

(சென்னை)

இந்தியாவில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்ப இந்திய அரசும், தமிழக அரசும் மிகத் தீவிரமாக செயற்பட்டு வருகின்றன.

சென்னைக்கு விஜயம் செய்துள்ள மத்திய உள்துறைஇணையமைச்சர் திரு. எம். எம். ஜேக்கப் இது தொடர்பான முயற்சியில் தமிழக அரசுடன் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளார்.

இது குறித்து அண்மையில் இந்தியா வந்த இலங்கைவெளியுறவு அமைச்சருடன் பேச்சுக்கள் நடாத்தப்பட்டதாகவும் இந்தியாவில் தங்கியுள்ள அகதிகள் விபரப்பட்டியல் விரைவில் இலங்கை அரசிடம் கையளிக்கப்படுமென்றும் அவர் கூறினார். (சி)

## போராளிகளின் பாவனைக்கான பொருள்கள்

[யாழ்ப்பாணம்]

காயமடைந்த போராளிகளின் பாவனைக்கென சில பொருட்கள் அவசரமாகத் தேவைப்படுகின்றன, குறிப்பாக கட்டில்கள், மெத்தைகள், படுக்கை விரிப்புக்கள், உடுபுடவைகள், துவாய்கள் போன்ற பொருட்களை வழங்க முன்வருவோர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள 'பாலம்' பணிமனையுடன் தொடர்புகொண்டு வழங்குமாறு 'பாலம்' பணிமனைப் பொறுப்பாளர் திரு. சலீம் கேட்டுள்ளார்.

## கர்நாடகத்திலும் இலங்கைத் தமிழர் பதிவுசெய்ய வேண்டும்

(பெங்களூர்)

கர்நாடக மாநிலத்தில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழர்கள் பதிவு செய்யுமாறு கேட்கப்படவுள்ளனர்.

அண்மையில் பெங்களூரில் இலங்கைப் போராளிகள் சிலர் கைது செய்யப்பட்டதை அடுத்து அம்மாநிலத்தில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழர்கள் அனைவரையும் தமிழ் நாட்டில் பொலிஸில் பதிவுசெய்யுமாறு கேட்கப்பட்டதுபோல் வேண்டுகோள் விடுக்கப்படவுள்ளது.

இம்முறை பற்றி அறிந்து கொள்வதற்காக கர்நாடக அதிகாரிகள் குழுவொன்று தமிழ் நாட்டுக்கும் விரைவில் வரவுள்ளது. (பூ)

## பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைப்பு

[கொழும்பு]

கொழும்புப் பத்திரிகைகள் பல சமாதானப் பேச்சை ஆரம்பிக்குமாறு விடுதலைபுலிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளன

ஆனையிறவில் 24 நாட்கள் போரின்பின்ராணுவம்ராணுவ முகாமுக்குள் நுழைந்ததைக் குறிப்பிட்டு, மேலும் இழப்புக்களைத் தவிர்க்க வேண்டுமாயின் யாவரும் பேச்சுவார்த்தையில் இறங்கவேண்டுமென ஐலண்ட் பத்திரிகை ஆசிரியத் தலையங்கம் தீட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## நேற்றைய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சந்திக்கு அருகில் நிலைகொண்டிருந்த படையினர் மீது விடுதலைப்புலிகள் நேற்று 4-45 மணியளவில் உக்கிரமான தாக்குதலை நடத்தினர்கள்.

புலிகள் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்த சமயம் குண்டு வீச்சு விமானங்கள் பலத்த குண்டுத்தாக்குதலை நடத்திய வண்ணமிருந்தன.

புலிகளின் விடாப்பிடியான தாக்குதல்களினால்இராணுவத்தினரின் பல காவலரண்கள் முற்றாக சேதமாக்கப்பட்டன.

இக் காவலரண்களில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் பலர் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதலில் முனைப்புடன் போராடிய 21 புலிகள் வீரமரணமடைந்தனர்,

இதேவேளை குறிஞ்சாதீவுப் பகுதியில நேற்று முன்தினம் இடம்பெற்ற சாக்குதலில் இரு கவச வாகனங்கள் புலிகளால் தகர்க்கப்பட்டது.

## அன்னதானம்

(யாழ்ப்பாணம்)

புளியங்கூடல் இந்தன் பிள்ளையார் கோவிலில் நாளை புதன் கிழமை, போராளிகளின் வெற்றிக்கான அபிஷேகமும், அன்னதானமும் நடைபெறவுள்ளது. (எஸ்)

## ஆனையிறவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போதும் புலிகள் சளைக்காது எதிர்த்தாக்குதல் நடத்தினர்கள்

இம்மோதல்களின் போது ஏற்பட்ட சேதவிபரங்கள் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (56)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

போராளிகளின் மருத்துவப் பராமரிப்புச் சம்பந்தமாக. 'கரங்கள் பொதுப் பணியகம்' பருத்தித்துறை பிரதான வீதியில் மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ளது.

சகல தரப்புப் பிரதிநிதிகளுக்குமான கலந்துரையாடல் கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு மேற்படி பணிமனையில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் பின்வரும்நிறுவனங்களின் வடமராட்சிப் பிரதிநிதிகளைக் கலந்துகொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வடமராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. சு. அரசண்ணா கேட்டுக்கொள்கிறார்.

சாரணர் இயக்கம், தமிழீழத் தேசிய ஆசிரியர் ஒன்றியம், போரூட், செஞ்சிலுவைச் சங்கம், தெங்கு பனம்பொருள் சங்கச் சமாசம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஒன்றியம், மாணவர் இயக்கம், முறைசாராக் கல்விப் பிரிவு, தனியார் கல்வி நிறுவன ஒன்றியம், தனியார் பேரூந்து ஒன்றியம், கடற்றொழிலாளர் ஒன்றியம், வர்த்தகர் சங்கம், சிகை அலங்கரிப்பாளர் ஒன்றியம், சனசமூகநிலையங்களின் ஒன்றியம், வட்டவை, சிற்றூரவைத் தலைவர்கள்.

## மீட்புப் படையே முகாமிற்குள் பிரவேசம்

### அரசு அறிவிப்பு

(கொழும்பு)

ஆனையிறவு இராணுவ முகாமுக்குள் கிழக்கு மாகாணத்தில் இருந்து அனுப்பப்பட்ட மீட்புப் படையினரே பிரவேசித்ததாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனையிறவு முகாம் புலிகளின் முற்றுகைக்கு உள்ளானதை அடுத்து ஜூலை 14ந் திகதி இப்படையினர் கிழக்கு மகாணத்திலிருந்து கொண்டுசெல்லப்பட்டு. கட்டைக்காட்டில் இறக்கிவிடப்பட்டனர்.

மூன்று வாரங்களுக்குச் சற்றுக் கூடுதலான நாட்கள் இடம்பெற்ற கடும் சண்டையின் பின்னர் இவர்கள் ஆனையிறவுக்குள் பிரவேசித்ததாக அரசு அறிவித்தது.

## ஆனையிறவு முகாமுக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியிலுள்ள கடற்படைக் கப்பல்களைத் தாக்கப் புலிகள் முயற்சி செய்வார்கள்.

ஆள் எண்ணிக்கை பலத்தாலும் உயர்ந்த ஆயுத பலத்தாலும் அரச துருப்பினர்கள் புலிப்படையினரிடமிருந்து இடங்களைக் கைப்பற்றக்கூடிய வல்லமை பெற்றிருந்தாலும் அதனைத் தொடர்ந்து தமது கட்டுப்பட்டிற்குள் வைத்திருக்கும் வல்லமை அவர்களிடம் இல்லை என்றும் தெரிவித்தார்.

## 1,600

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குறைத்தும் விடுதலைப்புலிகளின் மரணத்தை அதிகரித்தும் கூறிவருவது உண்மையல்ல வென்றும் அவர் மேலும் கூறினார்.

இதே யுத்தத்தில் புலிகள் தரப்பில் 288 பேர் மட்டுமே வீரமரணமடைந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். (பூ)

## கலைஞரின் தொலைபேசி ஒட்டுக்கேட்கப்படுவதாக குற்றச்சாட்டு

(சென்னை)

தமிழக முன்னாள் முதல்வர் மு. கருணாநிதியினதும், தி. மு. க. ராஜ்யசபா உறுப்பினர்களின் தொலைபேசித் தொடர்புகள் ஒட்டுக் கேட்கப்பட்டு வருவதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தி. மு. க. ராஜ்யசபா உறுப்பினர் ஆலடி அருணா நேற்றுச் சென்னையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இதனைத் தெரிவித்தார்.

அ. தி. மு. க. அரசின் இச்செயல் மோசமான ஒரு நடவடிக்கை என்றும் திரு. ஆலடி அருணா கண்டனம் தெரிவித்துள்ளார். (தி)

## ஆனையிறவு சென்ற

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டென்ஸில் கொப்பேகடுவ உட்பட சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் பலரும் முகாமிற்குள் சென்றதாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த அதிகாரிகள் முகாம் சுற்றுடலில் நடமாடியதனை நேற்றிரவு ரூபவாகினிச் செய்தியில் காட்டப்பட்டது.

## படையினர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பெற்றது.

இம்மாநாட்டில் ஆனையிறவு முகாமைப் பலப்படுத்துவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

இதன் முதற் கட்டமாக இம்முகாமில் பெரும் தொகையான படைகள் மற்றும் ஆயுதத் தளபாடங்கள் குவிப்பது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

## புலிகள் அரச

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேரடி கைகலப்பு மோதல்கள் இடம்பெற்றதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

புலிகள் தரப்பில் இம்முகாமைத் தொடர்ந்து தாக்கிவருவதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

## யாழ்ப்பாணத்தை

[1 ம் பக்கத் தொடர்ச்சி]

முன்னேறும் விதமாக அடுத்த கட்ட ராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளன.

இராணுவத்தினரின் ஆனையிறவுப் பிரவேசத்தின் பின் இராணுவநடவடிக்கைகள் நிறுத்தப்படமாட்டாது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடைசிப் புலி இருக்கும்வரை இராணுவ நடவடிக்கை தொடர்ந்து நடைபெறும். இதில் எவ்வித மாற்றமுமில்லை என்றார்.


# தேவை

4.3 H.P., 4000 R.P.M. உள்ள நல்ல நிலையிலான றெபின் (ROBIN) 'பம்' தேவை. விலை விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 1480,

மே/பா. ஈழநாடு லிமிட்.,

யாழ்ப்பாணம்.

[எ 1480]


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெலிங்டன் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஆகஸ்ட் 6ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paperat the General Post Office Sri Lanka under licence Number B/180328/81